**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED BLACK GRANITE QUARRY OF M/S KMB TRADING COMPANY AT S.F.NO.823(PART), 824/3 OVER AN EXTENT OF 4.50.0 HA IN AJJANAHALLI VILLAGE, PENNAGARAM TALUK, DHARMAPURI DISTRICT ON 20.01.2026 AT 11.00 A.M., AT M/s.R N MAHAL NEAR RAMANAGAMMAL VASANTHAM THEATRE, ERIYUR VILLAGE, PENNAGARAM TALUK, DHARMAPURI DISTRICT.**

**PRESIDING OFFICERS:**

| | | |
|---|---|---|
| 1. Tmt.R.Kavitha | : | District Revenue Officer,<br>Dharmapuri. |
| 2. Tmt.A.Nithyalakshmi | : | District Environmental Engineer(a/c),<br>TamilNadu Pollution Control Board,<br>Dharmapuri. |

List of Project representatives and public participated is enclosed

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri**

Good morning to everyone, I extend my respectful greetings to the District Revenue Officer, who is present here for the public hearing being conducted to obtain environmental clearance for the quarrying operations involving the mining of black granite stones by M/s. KMB Trading Company.

I also convey my greetings to all the officials, project proponents, consultants, and members of the public assembled here today.On behalf of the Tamil Nadu Pollution Control Board, I warmly welcome you all to this public hearing meeting.

**M/s.KMB Trading Company** has proposed to carry out quarrying operations at **Ajjanahalli Village, Pennagaram Taluk, Dharmapuri District** for this purpose, the company initially obtained **Mining Approval** from the Department of Geology and Mining and thereafter applied to the **State Environmental Impact Assessment Authority (SEIAA)** for Environmental Clearance.

Based on this application, the project proponent has received the **Terms of Reference (ToR)** from SEIAA. As stipulated in the ToR, SEIAA has requested the **Tamil Nadu Pollution Control Board** to conduct this public hearing, and accordingly, this meeting is being held today.

The public notice regarding this meeting was issued with the approval of the **District Collector** and was published on **03.12.2025** in the Tamil daily *Dinamalar* and the English daily *The New Indian Express*. In addition, information about this public hearing was also disseminated to the local residents through public address systems.

At present, the consultant of the project proponent will explain the details of the proposed project. Following this, members of the public are kindly requested to come forward and share their views, opinions, questions, or clarifications, if any, through the microphone provided here before expressing further opinions, the participants are requested to clearly mention their name and place before presenting their views. It is also informed that all events of the public hearing meeting will be audio and video recorded, and a written minutes will be prepared and sent to the State Environmental Impact Assessment Authority. Now, the project consultant is requested to explain the details of this project.

**Technical Presentation by the Project Consultant**

The Project Proponent has made a Technical Power Point Presentation briefing the project of M/s. KMB Trading Company at S.F.No.823 (Part),824/3 Overan Extent Of 4.50.0 Ha in Ajjanahalli Village, Pennagaram Taluk, Dharmapuri District.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri**

Now, the public can come here and express their opinions individually

**1 Mr. M. Dhanraj, Former AIADMK Union Secretary, Chinnavathalapuram, Ajjanahalli Panchayat.**

I respectfully convey my greetings to the District Revenue Officer, District Environmental Engineer, KMB Black granite Quarry proponent, and all the village residents present here today.

During the year 1992, a granite company known as Gem Granite operated approximately seven to eight quarries in and around Ajjanahalli village. At that time, these operations provided valuable self-employment opportunities to the local population. Around 10,000 people from this region travel to other states such as Andhra Pradesh, Kerala, and Karnataka to engage in quarry-related work.

For the past 30 years, there have been no industries operating in this area. Previously, during the tenure of Puratchi Thalaivar Dr.M.G. Ramachandran, about seven to eight quarrieswere managed and operated by the Tamil Nadu Minerals Corporation. Through this initiative, nearly 5,000 people from this region were provided employment opportunities comparable to government service, along with equivalent salaries.

However, quarry operations ceased nearly 30 years ago. We are pleased that mineral companies are now being re-established, as this will enable local employment opportunities for village residents. Many workers are currently compelled to stay away from their families and livelihoods, resulting in difficulties in returning home even during important personal and social occasions.

Providing employment locally will greatly support the livelihood of economically weaker sections. Therefore, with the cooperation of the Respectable Madam, I humbly request that approval be granted for the remaining quarries, so that sustainable employment opportunities may be provided to the local population.

**2.Mr.Karthick, Chinnavathalapuram, Ajjanahalli Panchayat**

We warmly welcome the District Revenue Officer, the District Environmental Engineer, and all the people who came here.we request that jobs be given to the local people.If this granite project starts. Thank you for giving me this opportunity

**3.Mr.Kumar, Ajjanahalli Panchayat**

If the project arrive, livelihoods will improve.

**4.Mr.Subash Chandra Bose, Chinnavathalapuram, Ajjanahalli Panchayat**

My greetings to the District Revenue Officer, the District Environmental Engineer, other government officials, and all the villagers. If this quarry starts, jobs should be given to local people only but not to outsiders.

I have a question for KMB Trading Company: If any accidents or deaths happen to our people while the operation of quarry, who will take responsibility—the government or the company? We need some assurance.Overall, commencement of quarry is a good thing.

**Project Consultant**

"Greetings to everyone. Beyond the concern that this quarry may cause accidents, the likelihood of accidents is actually very low-almost zero percent and there will be no accidents. During vehicle movement, drivers will be instructed to drive slowly and carefully.Similarly, after the quarry work is completed, proper fencing and barriers will be set up so that no villagers or animals can enter the area and get hurt.In case of any minor accidents,

insurance will be provided to the affected individuals. In the unfortunate event of a death, compensation will be given, and the government will also providesupport.We assure everyone that this quarry will not cause many accidents.

**5.Mr.Chinraj, Eriyur**

I extend my greetings to the District Revenue Officer, all the people present here, the elders, and my friends.Many granite quarries have operated in this area in the past. The village prospered because of them. From Pennagaram to Nagamarai, there were many such quarries, which contributed to develop tar roads in this area. Later, the government stopped some of these quarries. Now, permissions are being given gradually. If they are granted, everything will be good. If permissions are given, we will all get benefit.There are many quarries, and more permissions can still be given. We often go outside the village to work. But if there are quarries here, we can work locally. Without quarries in our area, families have to go to Andhra Pradesh, Karnataka, Kerala, and other states to earn a living. Now, many quarries exist in our area.If permissions are granted for these quarries, everyone will benefit. The people working in the quarry will be well. Buses, lorries, tea shops, and ration shops will all earn good income. If they are there, there won't be any problems. We are going out and struggling-this is what happening mam. Kindly grant permission for the quarries in this area.

**District Revenue Officer**

You give a petition to the District Collector on Monday regarding this matter. We are not aware of the reason why the previous quarry was closed. After reviewing the files ,we will examine the possibilities and take steps to address them so that permission can be considered

**Mr.Chinraj, Eriyur**

In areas like Chinnavathalapuram, many quarries that were previously operating have been shut down. Permission can be given for the quarries that

are still here. If permission is granted, jobs will be available for jack operators, backhoe operators, crane operators, and others.

Right now, most workers have gone outside the area to work. In Dharmapuri district, granite quarries were initially started here, and many quarries, like GEM, started here. When quarry operations stopped, everyone haveleft. They went to places like Andhra Pradesh and Karnataka to work in quarries.

However, our local people are here, and if jobs are provided, they will work. We will all stay here and will not go elsewhere. This is what is happening here, madam

**District Revenue Officer**

Your suggestions have been recorded, and we are trying to take action. Regarding the KMB Black Granite Quarry, you mentioned in your presentation that jobs will be provided to the local residents. Tomorrow, people from outside should not be brought in. A list of local residents should be prepared, and jobs should be given based on eligibility. Providing jobs will encourage them and create interest. Therefore, it is essential to give employment opportunities.

During election time, we received information that about 30,000 people were from outside. They only came for specific purposes like for casting vote, weddings, according to the data. This shows that locals have to go outside to earn a living. Your quarry should help to change this situation.

Therefore, when quarry work starts, a list of local residents should be made, and jobs must be given to them instead of outsiders.

**6.Mr.Mani, Vathalapuram**

Greetings to everyone,please ask the KMB Company whether they will assure that jobs are given to the local people. Right now, they are giving jobs mostly to outsiders.

**District Revenue Officer**

They have stated that local residents will get employment opportunities in this project.

**Mr.Mani, Vathalapuram**

Crane operators, masons, and laborers all go outside to work in places like Andhra Pradesh, Karnataka, and Maharashtra. if you look in the Amman Granite company here, no local people are working. Only outsiders are employed. Only operators and drivers are given work.

Ask where the local residents will go. Also, ask how many local people have actually been given jobs here

**District Revenue Officer**

They have stated that this project will provide direct employment to 22 local people, whether skilled or unskilled. Therefore, the company should provide direct jobs to all 22 individuals. Only if this is done will we cooperate with the implementation of this project.

**Project Consultant**

We spoke to the quarry owner before submitting the project report to the government. Government officials will inspect the site. We have specified that there will be both skilled and unskilled job opportunities. In the mining plan, we have detailed how deep excavation will be for each hectare and how many people will be needed. Based on that plan, we give our assurance.

If they say they cannot provide the jobs, you can ask them directly. The assurance has been given that priority will be given to local residents.

**7. Mrs.Jebakani, Social Activist**

For many years, in such public meetings, we are speaking on behalf of our activists across all districts. According to the Indian Act of 2018, whenever any quarry or any factory is operated, the opinions of the activists shall be

recorded. Based on that, I am expressing my opinion, I would like to extend my greetings to the District Environmental Officer present on the stage, the public, and all the volunteers like me who have come here.

The point I want to make is that the company operating this quarry should definitely provide employment opportunities to both educated and uneducated local youth. Similarly, one responsibility of the company is that even if the government takes steps to solve basic issues, the company should also take steps to provide current basic facilities to the people from the 10 percent of the profit .They should plant trees such as Pongai, Poovarasu, Aathi, and Neem because these trees provide shelter for birds and animals and produce oxygen for humans. Likewise, the company should ensure proper Education facilities. During special occasions, the company should participate and provide assistance to the local community. Many women in the surrounding villages are struggling without work. Some have taken loans, and if they get employment, they can repay these loans. Therefore, on behalf of our volunteers, I request that the company be given an approval to operate, and we seek confirmation of this. Thank you and greetings.

**<u>District Revenue Officer</u>**

You have understood well. If any matter arises, the villagers should come to a unanimous opinion on what benefit it will bring to us. Thank you very much for expressing your support. Action will definitely be taken. As mentioned on the stage, they will contribute Rs. 10 lakhs to our village through the Mineral Fund (DMF). This can be used for schools, development projects, or building a library. This will be part of their CSR activities. Whatever you request, they will provide. Additionally, they have also stated that they will plant 2,250 trees as part of green coverage, and this must be strictly ensured. Priority should be given to the types of trees they mentioned, and those trees should be procured from the Forest Department or other sources and planted accordingly.

Overall, we request that this quarry be operated in an environmentally friendly manner, without causing any harm to the public, and needs of the people be addressed when required, helping to improve their livelihood. Thank you.

**8.Mr.Muralidharan, Eriyur**

Will the quarry operate during night hours, and until what time will it run? If it operates after 5 PM, blasting and the use of heavy machinery could affect the local people. How far will the dust travel? if there is a complaint during work, whom should we inform? Can we report it to you? Or should we report directly to the company? If the company does not take action, then we can inform you next We request that the quarry be operated without causing any problems to the public.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri**

Complaints can be submitted to the District Administration, Tamil Nadu Pollution Control Board, and State Environmental Impact Assessment Authority,who grants environmental clearance. Also, complaints can be givento Department of Geology and Mines and Directorate General of Mines Safety (DGMS), which oversees mining and explosives control.

**Project Consultant**

During morning hours when children go to school, there will be no vehicle movement, and the quarry will operate only until 5:00 PM. No blasting will be done in this granite quarry.Native trees will be planted and a green cover will be created around the quarry to ensure that there are no problems for animals, bird, or humans due to noise or pollution. Dust will be controlled so that it does not escape from the machinery. Water sprinklers will be used 2–3 times a day when vehicles are moving to minimize dust.

There is no chance of excessive dust escaping. Blasting will only be done in gravel or rough stone quarries, not in the black granite quarry, so there will be no blasting here. We assure that no problems will occur.

**9.Mr.Palaniswamy, Periyavathalapuram.**

Greetings to everyone present. You mentioned that this quarry is in Ajjanahalli village. Could you clarify exactly which village it is located in Ajjanahalli or its surrounding area? You mentioned that all villages like Periya Vathalapuram and Chinna Vathalapuram fall under Ajjanahalli Panchayat. In which village exactly will this quarry be established?

Ajjanahalli is nearby, but does the quarry fall under two survey numbers? My opinion is that I welcome the quarry if it comes to a surrounding village. Jobs should be provided to all residents of the surrounding villages, and the operations must be conducted safely, without any blasting accidents or other disruptions. People should have assurance that no harm will come from the quarry.

Furthermore, if residents go to the quarry for information, they should receive clear answers and not to be ignored. No one should be turned away or denied work. Everyone seeking work should be treated respectfully and employed appropriately.

Similarly, after the quarry is set up, granite quarry contract should not be given in a way that forces workers to go to the company directly to ask for employment. This must not happen. I welcome the quarry, provided jobs are given to everyone and the village develops. Many of us have been forced to go outside the village, leaving behind their wife and children, to earn a living.

In this village, all the skilled masons, laborers, and drivers required for the granite quarry are available locally. I request the Revenue Department and KMB company to provide employment to them. This is my suggestion, and I seek assurance that it will be implemented. Thank you.

**Project Consultant**

The quarry is located in Ajjanahalli village. The village map shows not only houses and shops but also the surrounding fields, forests and the village boundaries. This quarry is entirely within the boundaries of Ajjanahalli village. We have already provided its survey number.

Ajjanahalli is also part of this village panchayat. The quarry is located in Ajjanahalli Village, Pennagaram Taluk, Dharmapuri District as specified in the Government Gazette and in the tender documents The hamlet that you said is not mentioned in the records. The survey numbers mentioned falls under Ajjanahalli Village only. A single quarry falls under two survey numbers. Since this quarry covers 4.5 hectares, it is possible that it may extend over two to four survey numbers.

**District Revenue Officer**

Good morning to everyone. Thank you very much for attending this public hearing in large numbers and for showing your support. The people welcome the KMB Black Granite Quarry with trust and confidence.To uphold their trust, we request you to provide the necessary local employment opportunities for them. We also request to ensure support for the people,through your CSR funds addressing any problems they may face at different times and meeting all their essential needs.Thank you.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Dharmapuri.**

Your views/opinions may also be submitted in the form of petitions. On behalf of the Tamil Nadu Pollution Control Board, sincere thanks were extended to all the people who attended this public hearing.

Regarding the proposed granite quarry project of the company, M/s.KMB Trading Company at S.F.No.823(P),824/3 over an extent of 4.50.0 Ha. In Anjenahalli Village, Pennagaram Taluk, Dharmapuri District, 8 Nos of representations were received during the public hearing meeting. No representations were received via email.

The attendance register of participants at the aforementioned public hearing meeting,representationsreceived during meeting in original along with a documentary (Pen drive) containing audio/video recordings of the meeting photographs, is attached herewith.

**District Environmental Engineer(a/c)**
**TamilNadu Pollution Control**
**BoardDharmapuri**

**District Revenue Officer**
**Dharmapuri**

5

**தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், , அஜ்ஜனஅள்ளி கிராமத்தில் புல எண் : 823 (பகுதி), 824/3, 4.50.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். KMB டிரேடிங் கம்பெனி கருப்பு கிரானைட் குவாரிக்கு 20.01.2026 அன்று முற்பகல் 11.00 மணியளவில் தி/ள். R.N மஹால், இராமநாகம்மாள் வசந்தம் தியேட்டர் அருகில், ஏரியூர் கிராமம், பென்னாகரம் வட்டம், தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விவரங்கள் :**

**முன்னிலை :**

| | | |
|---|---|---|
| திருமதி. ஆர்.கவிதா | : | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>தருமபுரி. |
| திருமதி. ஆ.நித்யலட்சுமி | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூ/பொ),<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>தருமபுரி. |

கலந்து கொண்ட திட்ட பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தருமபுரி.**

அனைவருக்கும் இனிய காலை வணக்கம், தி/ள்.KMB டிரேடிங் கம்பெனி என்ற நிறுவனம் கிரானைட் கற்களை வெட்டி எடுக்க வேண்டி சுரங்க பணி செய்வதற்காக சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி நடைபெறவுள்ள பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும் இங்கு கூடியிருக்கின்ற அனைத்து அலுவலர்கள், திட்ட முனைவோர், ஆலோசகர் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்து கொண்டு அனைவரையும் இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பில் வருக வருக என வரவேற்கிறேன்.

தி/ள்.KMB டிரேடிங் கம்பெனி என்ற நிறுவனம் தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், அஜ்ஜனஅள்ளி கிராமம் என்ற இடத்தில் சுரங்கப்பணி செய்வதற்காக முதலில் Mining Approval என்ற ஒரு அனுமதியை புவியியல் மற்றும் சுரங்கத்துறையிடம் பெற்று பின்னர் சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி மாநில

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு விண்ணப்பித்ததின் பேரில் அவர்களிடமிருந்து Terms of Reference (ToR) என்ற வரைவறிக்கை பெறப்பட்டு அதில் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தினை நடத்தி கொடுக்குமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தை கேட்டுக் கொண்டதற்கிணங்க இக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டம் சம்மந்தமான அறிவிப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஒப்புதலின் பேரில் தமிழ் நாளிதழ் தினமலர் மற்றும் ஆங்கில நாளிதழ் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸில் 03.12.2025-ம் தேதியன்று வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு ஒலிப்பெருக்கியின் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இத்திட்டத்தை குறித்து அவர்களின் ஆலோசகர் அவர்கள் எடுத்துரைப்பார்கள். பின்னர் பொதுமக்களாகிய தாங்கள் தங்களுடைய கருத்துக்கள், சந்தேகங்கள், விளக்கங்கள் ஏதேனும் இருப்பின் இம்மேடைக்கு அருகே வந்து இங்குள்ள ஒலிவாங்கியின் மூலம் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் கருத்துக்களை தெரிவிப்பதற்கு முன்னர் தங்களுடைய பெயர் மற்றும் ஊரின் பெயரை தெளிவாக தெரிவித்து விட்டு கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நிகழ்வுகள் அனைத்தும் ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு எழுத்துப்பதிவும் செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பது தெரிவித்து கொள்ளப்படுகிறது. தற்பொழுது இத்திட்டத்தை குறித்து அவர்களின் ஆலோசகர் எடுத்துரைக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.

**திட்ட ஆலோசகர்**

இத்திட்டம் குறித்த விளக்கங்களை நிழற்படம் (Powerpoint Presentation) மூலம் திட்ட ஆலோசகர் அவர்கள் விவரித்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தருமபுரி

தற்பொழுது பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை ஒவ்வொருவராக இங்கு வந்து கூறலாம்.

1. **திரு. M.தன்ராஜ், முன்னாள் அண்ணா திமுக ஒன்றிய செயலாளர், சின்னவத்தலாபுரம், அஜ்ஜனஅள்ளி ஊராட்சி**

மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்; அவர்களுக்கும், மதிப்பிற்குரிய KMB கருப்பு குவாரி நிறுவனர் அவர்களுக்கும் இங்கு வருகை தந்துள்ள அனைத்து கிராம பொதுமக்களுக்கும் எனது பணிவான வணக்கத்தை தெரிவித்து கொள்கிறேன். 1992 ஆம் ஆண்டு கால கட்டத்தில் ஜெம் கிரானைட் என்ற கிரானைட் நிறுவனம் அஜ்ஜனஅள்ளி கிராமத்தை சுற்றிலும் சுமார் 7 மற்றும் 8 குவாரிகள் செயல்பட்டது. அப்பொழுது தான் இந்த மக்களுக்கு ஒரு சுய வேலைவாய்ப்பு கிடைத்தது. சுமார் இங்கிருந்து 10000 மக்களுக்கு மேல் வெளிமாநிலங்களுக்கு ஆந்திரா, கேரளா, கர்நாடகா பகுதிகளுக்கு சென்று இந்த கல்குவாரி தொழிலை செய்து வருகிறார்கள். மேலும் 30 ஆண்டு காலமாக இங்கு தொழில் இல்லை. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் காலக்கட்டத்தில் நிர்வகிக்கப்பட்டு சுமார் 7, 8 குவாரிகள் செயல்;பட்டது. இந்த பகுதியில் சுமார் 5000 மக்கள் அரசு ஊழியராக ஆவதற்கு வாய்ப்பு கிடைக்கப்பட்டது. புரட்சித்தலைவரால் கனிம நிறுவனம் செய்யப்பட்டு எல்லோரும் அரசு ஊழியருக்கு இணையான சம்பளம் பெற்றனர்.

மேலும் 30 ஆண்டு காலமாக குவாரிகள் இல்லாமல் போனது. மீண்டும் கனிம நிறுவனங்களை நிறுவி உள்ளூர் கிராம மக்களுக்கு உள்ளூரில் அனைவருக்கும் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு வழிவகை செய்வதால் மிக சந்தோஷமாக உள்ளது. அவர்கள் தன் குடும்பத்தையும், தன் வாழ்வாதாரத்தையும் வெளியில் வைத்திருக்கிறார்கள். நல்லது, கெட்டது விஷேச காலகட்டங்களில் வர முடியாத சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கிறது.

இங்கே இவர்களுக்கு பணி கொடுத்தால் ஏழை மக்கள் எல்லாம் பிழைப்பதற்கு மிகவும் வசதியாக இருக்கும். மதிப்பிற்குரிய மேடம் அவர்கள் ஒத்துழைப்போடு எங்களுக்கு இன்னும் இருக்கின்ற குவாரிகளுக்கு எல்லாம் அனுமதி அளித்து இங்கு இருக்கிற பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

2. **திரு. கார்த்திக், சின்னவத்தலாபுரம், அஞ்ஜனஅள்ளி ஊராட்சி**

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்; அவர்களுக்கும் வருகை தந்திருக்கின்ற பொதுமக்கள் அனைவரையும் வருக என வரவேற்கின்றோம். இந்த கிரானைட் ஆரம்பித்தால் எங்கள் பகுதியை சார்ந்த பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என கூறி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன் நன்றி வணக்கம்.

3. **திரு. குமார், அஞ்ஜனஅள்ளி ஊராட்சி**

வேலை ஆரம்பித்தால் வாழ்வாதாரம் நன்றாக இருக்கும்

4. **திரு. சுபாஷ் சந்திர போஸ், அஞ்ஜனஅள்ளி ஊராட்சி**

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்; அவர்களுக்கும் மற்றும் அரசு அதிகாரிகள் அனைவருக்கும், ஊர் பொதுமக்கள் அனைவருக்கும் என் முதற்கண் வணக்கம். மேடம் இந்த குவாரி வருவதினால் என்னுடைய உள்ளூர் பொதுமக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். வேற வெளியூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் வழங்க கூடாது. அப்புறம் KMB டிரேடிங் கம்பெனிக்கு நான் ஒரு கேள்வி கேட்கிறேன். எங்களை சுற்றி குவாரியாக இருக்கும் போது என்னுடைய மக்களுக்கு விபத்து, இறப்பு இந்த மாதிரி எதுவும் பிரச்சனை நடந்தா அதற்கு அரசு பொறுப்பு எடுத்துக்குவாங்களா, இல்லை இந்த கம்பெனி பொறுப்பு எடுத்துக்குவாங்களா அதற்கு ஏதாவது ஒரு உறுதி கொடுக்கனும். குவாரி வருவதினால் நல்லது தான்.

**திட்ட ஆலோசகர்**

அனைவருக்கும் எனது வணக்கம், இந்த குவாரியால் விபத்துகள் அதிகம் என்பதை தாண்டி விபத்துகள் வருவது மிகவும் குறைவு தான் பூஜ்ஜியம் சதவீதம் மற்றும் விபத்துகள் இருக்காது. வாகன போக்குவரத்தின் போது ஓட்டுநரிடம் சொல்லி மெதுவாக ஓட்டுவோம். அதே போல் குவாரி வேலை முடிந்த பிறகும் சுற்றி வேலிகள் அமைத்து எந்த ஒரு பொதுமக்களும், விலங்குகளும் உள்ளே போய் விழுகாத வண்ணம் பார்த்து கொள்வோம். மேலும் முடியாத பட்சத்தில் ஏதாவது சின்ன ஆபத்து என்றால் ஒவ்வொருத்தருக்கும் இன்சூரன்ஸ் போட்டு கொடுக்கப்படும். அதே போல் இறந்து விட்டால் அதற்கான இழப்பீடும் செய்வாங்க அரசாங்க தரப்பிலும் பெற்று தருவாங்க. இந்த குவாரியினால் விபத்துகள் அதிகம் வராது என உறுதி அளிக்கிறோம்.

5. **திரு.சின்ராஜ், ஏரியூர்**

மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், இங்கு வந்திருக்கின்ற பொதுமக்களுக்கும், பெரியோர்களுக்கும், நண்பர்களுக்கும் பொதுவான வணக்கத்தை தெரிவித்து கொள்கிறேன். இந்த பகுதியில் இதற்கு முன்னாடி நிறைய கிராணைட் குவாரிகள் நடந்து கொண்டிருக்கிறது. ஊர் செழிப்பாக இருந்தது. பென்னாகரம் முதல் நாகமரை வரை இந்த மாதிரி குவாரி இருந்ததால் தார்சாலை ஆனது. அதற்கு பின் அரசு இந்த குவாரியை நிறுத்தினாங்க. இப்ப ஒன்று ஒன்றாக கொடுக்கிறார்கள் கொடுத்தால் எல்லாம் நன்றாக இருக்கும். தயவு செய்து கொடுத்தால் நாங்க எல்லோரும் நன்றாக இருப்போம். நிறைய குவாரிகள் இருக்கு இன்னும் பல குவாரிகளுக்கு கொடுக்கலாம். நாங்க வெளியூர் போய் வேலை செய்றோம். ஆனா இங்க வந்து செய்ய முடியல இங்க குவாரி இல்லைனா குடும்பங்களை விட்டுட்டு ஆந்திரா, கர்நாடகா, கேரளா என்று வெளியே செல்கிறோம். இப்ப நம்ம இடத்தில் நிறைய குவாரிகள் இருக்கிறது.

இந்த குவாரிகளுக்கு அனுமதி கொடுங்க கொடுத்தால் எல்லோரும் நல்லா இருப்போம். குவாரி பணி செய்பவர்களும் நல்லா இருப்பாங்க. பேருந்து, லாரிகள், டீ கடை, ரேசன் கடை எல்லாருக்கும் நிறைய வருமானம் வரும். அவங்க இருந்தாங்கனா பிரச்சனை இல்ல. நாங்க வெளியே போய் கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறோம் இது தான் நடக்குது அம்மா, தயவு கூர்ந்து இந்த பகுதியில் இருக்கிற குவாரிகளுக்கு பரிந்துரை அனுமதி கொடுக்கனும்.

**மாவட்ட வருவாய் அலுவலர், தருமபுரி**

நீங்கள் திங்கட்கிழமை ஒரு மனு எழுதி கொண்டு வந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கொடுங்க. ஏற்கனவே நடைபெற்ற குவாரி எந்த காரணத்தினால் மூடப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. அது என்னவென்று கோப்புகளை ஆய்வு செய்து விட்டு எங்களால் அனுமதி கொடுக்க ~~முடியவில்லை~~ பெறாததற்கு என்றால் அதற்கான சாத்திய கூறுகளை ஆராய்ந்து அவை வருவதற்கு நடவடிக்கை எடுக்கிறோம்.

**திரு.சின்ராஜ், ஏரியூர்**

இங்கு சின்ன வத்தலாபுரம் போன்ற ~~பகுதிகளில்~~ பல்வேறு நடைபெற்ற குவாரிகள் எல்லாம் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இங்கு இருக்கிற குவாரிகளுக்கு அனுமதி கொடுக்கலாம். கொடுத்தால் ஜாக்கி ஆப்ரேட்டர், பொக்லைன் ஆப்ரேட்டர், கிரேன் ஆப்ரேட்டர் எல்லோருக்கும் வேலை கிடைக்கும். ஆனால் எல்லோரும் வெளியே சென்று தான் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்தில் கிரானைட் குவாரியே இங்கு தான் வந்தது. ஜெம் போன்ற நிறைய குவாரிகள் இங்கு தான் வந்தது. குவாரி பணி நிறுத்தியதால் எல்லோரும் வெளியே போய் விட்டார்கள். அவர்கள் ஆந்திரா, கர்நாடகா போன்ற இடத்தில் போய் குவாரி எடுத்து விட்டார்கள். ஆனால் நம்ம நபர்கள் இங்கு இருக்கிறாங்க வேலை கொடுத்தால் செய்வாங்க நாங்க எல்லோரும் இங்கே இருப்போம் எங்கேயும் போக மாட்டோம். இது தான் அம்மா இங்கு நடந்து கொண்டிருக்கிறது.

மாவட்ட வருவாய் அலுவலர், தருமபுரி

தங்களுடைய கருத்து பதிவு செய்யப்பட்டிருக்கிறது அதற்கான நடவடிக்கை எடுக்க முயற்சி மேற்கொள்கிறோம். KMB கருப்பு கிரானைட் குவாரி நீங்க வந்து அவங்க சொல்லுகிற முக்கியமான விஷயம் நிழற்படத்தில் (Presentation)–ல என்ன கொடுத்திருக்கிறீர்களோ உள்ளூர் வாசிகளுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தருகிறோம் என சொல்லி இருக்கீங்க. நாளைக்கு வெளியில் இருந்து ஆட்களை கூட்டி வர கூடாது. இங்கு வேலை செய்ய இங்கு இருக்கிற மக்களுக்கு ஒரு பட்டியல் எடுத்து தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். வேலை வழங்கினால் தான் அவர்களுக்கு மறுபடியும் ஆர்வம் வரும். அதனால கண்டிப்பாக வேலை வாய்ப்பு கொடுங்க. நாங்கள் தேர்தல் நேரத்தில் SIR எடுக்கும் போது 30000 பேர் வெளியூரில் இருப்பதாக தகவல் கிடைத்தது. அவர்கள் ஓட்டுப்போட மற்றும் கல்யாணம் போன்ற விஷேசங்களுக்கு மட்டும் தான் வருகிறார்கள் என தகவலும் மற்றும் தரவுகளும் இருக்கிறது. அதனால் அவங்க பிழைப்புக்காக வெளியூர் போகிற அந்த சூழ்நிலையை நீங்க மாற்றிடனும். அதனால் உங்க குவாரி அதற்கு உதவியாக இருக்கனும். அதனால் வெளியூர் மக்களை விட, உள்ளூரில் இருக்கிறவர்கள் பட்டியல் எடுத்து வைத்து கொண்டு வேலை ஆரம்பிக்கும் போது உள்ளூர் வாசிகளுக்கு கண்டிப்பாக வேலை வாய்ப்பு தரணும்.

6. திரு.மணி, வத்தலாபுரம்

அனைவருக்கும் வணக்கம், உள்ளூரில் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பார்களா என இந்த KMB நிறுவனம் உறுதி கொடுப்பார்களா அவர்களை சொல்ல சொல்லுங்க. வெளியூர் இந்தி நபர்களை தான் எல்லாவற்றிலும் வேலைக்கு வைத்திருக்கிறார்கள்.

மாவட்ட வருவாய் அலுவலர், தருமபுரி

இந்த திட்டத்தில் உள்ளூர் வாசிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என சொல்லியிருக்காங்க.

**திரு.மணி, பெரியவத்தலாபுரம்**

கிரேன் ஆப்ரேட்டர், மேஸ்திரி, கொத்தனார் எல்லோரும் வெளியூர் ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா எல்லா இடங்களுக்கும் சென்று வேலை பார்க்கிறார்கள். ஆனால் இங்கு அம்மன் கிரானைட் என்ற நிறுவனம் வந்திருக்கிறது அதில் பார்த்தீர்கள் என்றால் உள்ளூர் நபர்கள் யாரும் வேலை செய்யவில்லை. இந்திகாரர்கள் தான் வேலை செய்கிறார்கள். ஆப்ரேட்டர், டிரைவர் மட்டும் தான் வைத்து வேலை செய்கிறார்கள். உள்ளூர் வாசிகள் எங்கு போவோம். உள்ளூரில் எத்தனை நபர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள் என நீங்கள் கேளுங்கள்.

**மாவட்ட வருவாய் அலுவலர், தருமபுரி**

இந்த திட்டம் தொழில் நுட்பம் சார்ந்த அல்லது தொழில் நுட்பம் சாராத 22 உள்ளூர் நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பை தருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் 22 நபர்களுக்கும் நேரடி வேலை வாய்ப்பை நிறுவனம் கொடுத்திடனும். கொடுத்தால் தான் இந்த திட்டம் வருவதற்கு நாங்கள் ஒத்துழைப்போம்.

**திட்ட ஆலோசகர்**

கண்டிப்பாக குவாரி உரிமையாளரிடம் பேசி தான் அரசாங்கத்திற்கு திட்ட அறிக்கை கொடுத்துள்ளோம். அரசாங்கத்தில் இருந்து நேராக வந்து ஆய்வு செய்வார்கள். மேலும் தொழில் நுட்பம் சார்ந்த அல்லது தொழில் நுட்பம் சாராத வேலை வாய்ப்புகள் என்று சொல்லியிருக்கிறோம். ஒரு ஹெக்டேருக்கு எவ்வளவு ஆழம் எடுப்பார்கள் அதற்கு எவ்வளவு நபர்கள் தேவைப்படும் என்று நாங்கள் சுரங்க திட்டத்தில் (Mining Plan) சொல்லியிருக்கிறோம். அந்த Plan வைத்து தான் நாங்க உறுதிமொழி கொடுக்கிறோம். அப்படி வேலை கொடுக்க முடியாது என்று சொன்னால் நீங்கள் அவர்களை நேரடியாக கேட்கலாம். அதற்கான உறுதிமொழி கொடுத்திருக்காங்க உள்ளூர் மக்களுக்கு தான் முதலில் வாய்ப்பு கொடுக்கிறோம்.

7. **திருமதி.M.ஜெபக்கனி, சமூக ஆர்வலர்,**

பல ஆண்டுகளாக இது போன்ற பொது கூட்டத்தில் எல்லா மாவட்டங்களிலும் எங்கள் ஆர்வலர்கள் சார்பாக நாங்கள் பேசி கொண்டிருக்கின்றோம். அதாவது 2018 இந்திய சட்டத்தின் படி ஆர்வலர்கள் எந்த ஒரு குவாரி நடத்தினாலும், எந்த ஒரு தொழிற்சாலை நடத்தினாலும் அவர்களுடைய கருத்துக்கள் பதிவு வைக்கப்படும். அதன் அடிப்படையில் என்னுடைய கருத்தை அதற்கு முன்பாக மேடையில் இருக்கின்ற சுற்றுச்சூழல் அலுவலர் அவர்களுக்கும், பொதுமக்களுக்கும் என்னை போன்று வந்திருக்கின்ற ஆர்வலர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரியப்படுத்தி கொண்டு நான் சொல்ல கூடிய கருத்து என்னவென்றால் அந்த குவாரியை சுற்றியுள்ள அந்த நிறுவனம் நடத்த கூடிய நபர்கள் கண்டிப்பாக படித்த இளைஞர்களுக்கும், படிக்காத இளைஞர்களுக்கும் கண்டிப்பாக வேலை வாய்ப்பை கொடுப்பார்கள். அதுபோல அவர்கள் செய்ய கூடிய ஒரு விஷயம் அவர்கள்; 10 சதவீத லாபத்தை எடுத்து அடிப்படை பிரச்சனைகள் அரசாங்கம் செய்து கொடுத்தாலும் தற்போதைய அடிப்படை பிரச்சனைகளை மக்களுக்கு செய்து கொடுக்க வேண்டும். அடுத்ததாக மரங்கள் புங்கை மரம், பூவரச மரம், அத்தி மரம், வேப்ப மரம் அனைத்து மரங்களையும் நடுவார்கள். ஏனென்றால் அங்கு பறவைகள் தங்கும் விலங்குகள் இருக்கும் மனிதர்களுக்கு அந்த மரங்கள் மூலமாக ஆக்சிஜன் கிடைக்க பெறும். அதுபோல் கல்வி வசதி கண்டிப்பாக அவர்கள் மூலம் கிடைக்கும்;. விஷேச காலங்களில் இந்நிறுவனமானது அதில் கலந்து கொண்டு அவர்களுக்கு உதவிகள் கொடுக்கும். அது போல் அந்த கிராமத்தை சுற்றி நிறைய பெண்கள் வேலை இல்லாமல் தவித்து கொண்டு இருப்பார்கள். கடன் உதவி தொகை வாங்கியிருப்பார்கள் இந்த வேலை கிடைத்தால் அந்த கடனை எல்லாம் அடைக்கலாம் என்று, நான் சொல்ல கூடிய விஷயம் என்னவென்றால் கண்டிப்பாக இந்த நிறுவனத்திற்கு தடையில்லா சான்று தாங்கள் வழங்க ஆவனம் செய்ய வேண்டும் என எங்களுடைய ஆர்வலர் சார்பாக கேட்டு கொண்டு விடை பெறுகிறேன் நன்றி வணக்கம்.

**மாவட்ட வருவாய் அலுவலர், தருமபுரி**

நன்றாக புரிந்து வைத்திருக்கிறீர்கள் ஒரு விஷயம் வந்தது என்றால் அது நமக்கு எந்தவித நன்மைகள் தரும் என ஊர்மக்கள் எல்லாரும் ஒருமித்த கருத்தா வரணும் என சொல்லி உங்க ஆதரவு தெரிவித்தற்கு மிக்க நன்றி. கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். அந்த மேடம் கூறியது போல் நம்ம கிராமத்திற்கு ரூபாய் பத்து இலட்சம் பங்களிப்பு செய்வார்கள். District Mineral Fund – DMF என்பதன் மூலம் அதை செய்வார்கள். பள்ளிகளுக்கோ வேறு ஏதாவது வளர்ச்சிக்கோ, நூலகம் கட்டுவதற்கோ செய்வார்கள். அதற்கு CSR Activity என்று சொல்லுவார்கள். உங்களுக்கு என்ன தேவை என்று சொன்னீர்கள் என்றால் அதை செய்து கொடுப்பார்கள். அதுமட்டுமில்லாமல் Green Coverage 2250 மரங்கள் நடுவோம் என சொல்லியிருக்காங்க அதை கண்டிப்பாக உறுதி செய்திடனும். அவர்கள் சொல்லுகிற மரங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து வனத்துறை அல்லது வேறு இடத்தில் வாங்கி அவர்கள் சொன்ன மரங்களையும் நடுங்கள். ஆக மொத்தத்தில் இது பசுமையான குவாரியாக செயல்படுவதற்கும், மக்களுக்கு எந்தவித பாதிப்பும் தராத இருக்கவும், சேதமோ, தேவைகளோ அவர்களுக்கு தேவைப்படும் போது தேவையானவற்றை செய்து கொடுத்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம் நன்றி வணக்கம்.

**8. திரு.முரளிதரன், ஏரியூர்**

இரவு நேரங்களில் குவாரியை இயக்குவார்களா, எந்த நேரம் வரை இயக்குவார்கள். மாலை 5 மணிக்கு மேல் இயக்கும் போது வெடி வைப்பதாலும், கனரக இயந்திரங்கள் இயக்குவதாலும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட கூடும். தூசுகள் எவ்வளவு தூரத்திற்கு வரும். நீங்க சொல்லுகிறீர்கள் வேலை செய்யும் போது புகார் வந்தால் யாரிடம் சொல்லுவது மேடம் உங்களிடம் சொல்லலாமா. நேரிடையாக நிறுவனத்திடம் சொல்லி அவர்களிடம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அடுத்தது உங்களிடம் தெரிவிக்கலாம். பிரச்சனை இல்லாமல் இயக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தருமபுரி**

மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் கொடுக்கலாம். அவர்கள் தான் இவர்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி தர போகிறார்கள் அவர்களிடம் புகார் தெரிவிக்கலாம். புவியியல் சுரங்கத்துறையிடம் கொடுக்கலாம் DGMS என்று இருக்கிறார்கள். Mining Explosives Control செய்வதற்கு என்று துறை இருக்கிறது அவர்களிடம் தெரிவிக்கலாம்.

**திட்ட ஆலோசகர்**

காலை பள்ளிக்கு செல்லும் நேரங்களில் வாகன போக்குவரத்து இருக்காது மேலும் மாலை 5.00 மணி வரை மட்டுமே குவாரியை இயக்குவார்கள். இந்த கிராணைட் குவாரியில் வெடி வைப்பது இல்லை. விலங்குகளுக்கும், பறவைகளுக்கும், மனிதர்களுக்கும் இரைச்சல் மற்றும் மாசு தொடர்பான எந்த பிரச்சனையும் வராத வண்ணம் நாட்டு மரங்கள் நட்டு பசுமை போர்வை அமைத்து செயல்படுத்துவோம். தூசுகள் இயந்திரத்தில் இருந்து வெளியே வராத அளவிற்கு தான் இருக்கும். ஒரு நாளைக்கு 2 அல்லது 3 முறையோ வாகனங்கள் செல்லும் போது நீர் தெளிப்பான்கள் மூலம் நீரை தெளிப்போம். தூசுகள் அதிகமாக வெளியே வருவதற்கு வாய்ப்புகள் இல்லை. கிராவல் குவாரி, ரப் ஸ்டோன் குவாரி அதில் தான் Blasting செய்வாங்க புகை வரும் கிராணைட் குவாரி என்பதால் வெடி வைக்கிறது வாய்ப்புகள் இல்லை. எவ்வித பிரச்சனையும் வராது என தெரிவித்து கொள்கிறோம்.

9. **திரு. பழனிசாமி, பெரியவத்தலாபுரம்**

வந்திருக்கின்ற அனைவருக்கும் வணக்கம், இந்த குவாரி அஜ்ஜனஅள்ளி கிராமம் என்று சொல்லியிருக்கீங்க. இந்த குவாரி எந்த ஊரில் அமைந்திருக்கிறது. அஜ்ஜனஅள்ளி கிராமமா அல்லது சுற்று வட்டாரமா என தெரிவிக்கவும். சொல்லியிருக்கீங்க இந்த கிராமத்தில் பெரிய வத்தலாபுரம், சின்ன வத்தலாபுரம் போன்ற அனைத்து கிராமங்களும் அஜ்ஜனஅள்ளி ஊராட்சியில் அடங்கி உள்ளது அதில் எந்த கிராமத்தில் இந்த குவாரி அமைய போகிறது.

அஜ்ஜனஅள்ளி என்பது பக்கமாக தான் இருக்கிறது. இரண்டு சர்வே எண் வருகிறதா. என்னுடைய கருத்து சுற்று வட்டார கிராமத்திற்கு வர கூடிய குவாரியை வரவேற்கிறேன். சுற்று வட்டார கிராமத்தில் உள்ள அனைவருக்கும் வேலைவாய்ப்புகள் வழங்கி யாருக்கும் எந்தவித இடையூறும் இன்றி எந்தவித வெடிவிபத்தும், அசம்பாவிதம் இன்றி நடத்துமாறு மக்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். மேலும் குவாரிக்கு சென்று தகவல் கேட்டால் எந்தவித பதிலும் கொடுப்பதில்லை. அதுபோல நம்முடைய இடத்தில் நடக்க கூடாது. அதுபோல் எல்லோருக்கும் பொது ஒத்துழைப்பு கொடுத்தும், வேலை கேட்டோருக்கு வேலை இல்லை என்று வெளியே விரட்ட கூடாது. எந்த ஒரு வேலையாக இருந்தாலும் மரியாதை கொடுத்து வேலைக்கு அமர்த்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இதே போல் குவாரி உருவான பின்பு கிரானைட் குவாரி கான்ட்டிராக்ட் விட கூடாது. கான்டிராக்ட் விடப்பட்டால் நாங்கள் வேலை கேட்டால் கம்பெனியை சென்று கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள். அதுபோல் நடக்க கூடாது. குவாரி வருவதை நான் வரவேற்கிறேன். எல்லோருக்கும் வேலை வாய்ப்பு வழங்கனும், கிராமமும் முன்னேற வேண்டும். நாங்கள் மனைவி, குழந்தைகள் விட்டுட்டு வெளியூர் சென்று கொண்டிருக்கிறோம்.

இந்த கிராமத்தில் கிரானைட் குவாரிக்கு தேவையான மேஸ்திரிகள், லேபர்கள், டிரைவர்கள் எல்லோரும் இருக்கிறார்கள் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குமாறு வருவாய் துறையினருக்கும், KMB நிறுவனத்தினரையும் கேட்டுக் கொள்கிறேன். இந்த கருத்து முன் வைக்கிறேன் இதை செயல்படுத்தனும் என்று சொல்லி விடை பெறுகிறேன் நன்றி.

**திட்ட ஆலோசகர்**

குவாரி பகுதி அஜ்ஜனஅள்ளி கிராமத்தில் தான் அமைந்திருக்கிறது. கிராமத்திற்கு என்ற வரைப்படம் வீடுகள், கடைகள் அதுமட்டுமில்லாமல் சுற்று வட்டாரத்தில் உள்ள வயல்கள், காடுகள் கிராம எல்லைகள் வரைந்திருக்கிறது. இந்த குவாரி அஜ்ஜனஅள்ளி கிராம எல்லைக்குள் தான் அமைந்திருக்கிறது. அதனுடைய சர்வே எண் நாங்க சொல்லியிருக்கிறோம்.

இந்த ஊராட்சியில் அஜ்ஜனஅள்ளியும் அந்த கிராமம் தான். குவாரி அஜ்ஜனஅள்ளி கிராமம் தான் அரசாங்க அரசிதழில் மற்றும் டெண்டரில் தாலுக்கா பென்னாகரம், மாவட்டம் தருமபுரி, கிராமம் அஜ்ஜனஅள்ளி தான் குறிப்பிட்டு இருக்கிறது. நீங்க சொல்லுகிற குக்கிராமம் சொல்லவில்லை. அவங்க சொல்ல கூடிய புல எண்ணில் அஜ்ஜனஅள்ளி கிராமத்தில் தான் இருக்கிறது என்று சொல்லியிருக்காங்க. ஒரே குவாரி தான் இரண்டு சர்வே எண்ணில் வருகிறது. இந்த குவாரி 4.5 ஹெக்டேர் என்பதால் இரண்டு முதல் நான்கு சர்வே எண் கூட வருவதற்கு வாய்ப்பு உள்ளது.

**மாவட்ட வருவாய் அலுவலர், தருமபுரி**

அனைவருக்கும் காலை வணக்கம், இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு பெரும்திரளான மக்கள் வந்திருந்து உங்கள் ஆதரவை தெரிவித்ததற்கு மிக்க நன்றி. இந்த KMB கருப்பு கிரானைட் குவாரியை மக்கள் நம்பிக்கையோடு வரவேற்கிறார்கள். அவர்கள் நம்பிக்கைக்கு ஏற்றவாறு நீங்கள் நடந்து கொண்டு அவர்களுக்கு தேவையான உள்ளூர் வேலைவாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்து அவர்களுக்கு எந்தெந்த நேரத்தில் என்னவிதமான பிரச்சனைகள் வருகிறதோ அதற்கு உங்க CSR நிதி மூலம் என்ன செய்த கொடுக்க முடியுமோ மக்களுக்கு ஒரு பாதுகாப்பு அரணாக இருந்து அவர்களுக்கு தேவையான தேவைகள் எல்லாம் செய்து கொடுக்கும் படி கேட்டுக் கொள்கிறேன் நன்றி.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தருமபுரி

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை மனுவாகவும் கொடுத்தால் ஏற்று கொள்ளப்படும். இக்கருத்து கேட்பு கூட்டத்திற்கு வந்திருக்கின்ற பொதுமக்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக மிக்க நன்றியினை தெரிவித்து கொண்டார்.

மேலும் பொதுமக்கள் கருத்து கேட்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகைப் பதிவேடு, ஒலி மற்றும் ஒளிப்பதிவுகளின் குறும்பதிவி (Pendrive), பெறப்பட்ட மனு மற்றும் புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூ/பொ)
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
தருமபுரி

மாவட்ட வருவாய் அலுவலர்
தருமபுரி